

நீலகிரி மாவட்டம், உதகை அரசினர் தாவரவியல் பூங்காவில் நடைபெறவுள்ள 127வது மலர்க்காட்சியினை முன்னிட்டு, அதன் முன்னேற்பாடு பணிகளை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா மற்றும் அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் ஆகியோர் நேற்று முன்தினம் (09.05.2025) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி என்.எஸ்.நிஷா, தோட்டக்கலை இணை இயக்குநர் திருமதி ஷிபிலா மேரி உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம் சிவகிரி அருகே மேக்கரையான் தோட்டத்தில் கொலை செய்யப்பட்ட விவசாயி குடும்பத்தினருக்கு அமைச்சர் சு.முத்துசாமி நேரில் சென்று ஆறுதல் கூறினார். அதுபோது கே.இ.பிரகாஷ் எம்.பி., வி.சி.சந்திரகுமார் எம்.எல்.ஏ., எம்.கந்தசாமி, எஸ்.எல். டி.ப.சச்சிதானந்தம், மு.சுப்ரமணியம், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



கோவை சரவணம்பட்டி பகுதி தி.மு.க. சார்பில் ‘நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு’ என்ற தலைப்பில் 4ம் ஆண்டு தி.மு.க. அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் உடையாம்பா ளையத்தில் நடைபெற்றது. இதற்கு மாவட்ட திட்டக்குழு உறுப்பினரும், சரவணம்பட்டி பகுதி செயலாளருமான 11வது வார்டு கவுன் சிலர் சிவா என்ற பழனிச்சாமி தலைமை தாங்கினார். வார்டு செயலாளர் முத்துசாமி வரவேற்றார். கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, கோவை கணபதி ராஜ்குமார் எம்.பி., கலீம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு தி.மு.க.வின் சாதனைகள் குறித்து பேசினர். நிகழ்ச்சியில் அசோக்பாபு ஆறுக்குட்டி, டி.பி.சுப்பிரமணியம், ரங்கசாமி, யாஸ்மின் சேட், ஆரோக்கியஜான், பூங்கொடி சோமசுந்தரம், கதிர்வேலுசாமி, சந்திரசேகர், பொன்னுசாமி மற்றும் நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொன்டனர்.

# இரு மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு உட னடி உதவிகள்!

## முதல்வரின் கருணை உள்ளம்: குடும்பத்தினர் நெகிழ்ச்சி - நன்றி!



கிருஷ்ணகிரி - மாணவர் கீர்த்திவர்மா



நாகை - மாணவர் ஆனந்தன்

சென்னை, மே. 11

**+2 தேர்வில் சாதித்த மாற்றுத்திறனாளி மாணவர்கள் இருவருக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் கருணை உள்ளத்தால் உடனடி உதவிகள் கிடைத்துள்ளது.**

+2 தேர்வு முடிவுகள் 8.5.2025 அன்று வெளியானது. இதில் கிருஷ்ணகிரி மாவட்டம் ஜூனூர் பகுதியைச் சேர்ந்த கீர்த்தி வர்மா என்ற மாணவர் அரசுப் பள்ளியில் படித்து தேர்வில் 471 மதிப்பெண்கள் பெற்று சாதித்துள்ளார். இவருக்கு சிறு வயதில் மின்சாரம் தாக்கி இரு கைகளையும் முழுங்கைக்கு கீழ் இழந்தவர். உதவியாளர் ஒருவரின் உதவியுடன் +2 தேர்வில் சாதனை புரிந்த கீர்த்தி வர்மாவிடம் இரு கைகள் இல்லாத ஏக்கம் இருந்து வந்தது.

தேர்வு முடிவு மகிழ்ச்சியில் கீர்த்தி வர்மா முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கோரிக்கை வைத்தார். அதாவது முதல்வர் அவர்கள்தான் தனக்கு கைகொடுக்க வேண்டும் என்று கண்ணீருடன் கூறியிருந்தார்.

இதனை அறிந்த முதல்வர் அவர்கள் “கண்ணீர் வேண்டாம் தம்பி!" என தமது எக்ஸ் தளத்தில் பதிவிட்டதுடன், உடனடியாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனை தொடர்புகொண்டு அந்த மாணவனுக்கு கைகள் கிடைக்க உரிய நடவடிக்கை எடுத்திட அறிவுறுத்தினார்.

இதனையடுத்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாணவர் கீர்த்தி வர்மாவை சென்னைக்கு வரவழைத்து அவருக்கு அளிக்க வேண்டிய சிகிச்சை முறை குறித்து மருத்துவக் குழுவுடன் ஆலோசனை நடத்தி அந்த மாணவனுக்கு இரு கைகள் கிடைக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதேபோன்று நாகை மாவட்டத்தைச் சேர்ந்த கண் பார்வை குறைபாடு உள்ள மாணவர் ஆனந்தன் கணினி வழியே +2 தேர்வு எழுதி 486 மதிப்பெண்கள் பெற்று அசத்தியுள்ளார். இவரது திறமையை அறிந்து முதல்வர் அவர்கள் அந்த மாணவனுக்கு உதவிட கழக நிர்வாகிகளைக் கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து மாவட்டச் செயலாளர் நிவேதா முருகன் எம்.எல்.ஏ. கழக நிர்வாகிகளுடன் அந்த மாணவர் இல்லம் சென்று கணினியுடன் ரூ.50 ஆயிரம் நிதி உதவியும் செய்து முதல்வர் அவர்கள் சார்பில் மாணவர் ஆனந்தனுக்கு வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

முதல்வர் அவர்களின் உடனடி உதவிக்கு மாணவர்களின் குடும்பத்தினர் நெகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்துள்ளனர்.




வருகையில் மகிழும்
நாகூர் V.S.சாதிக் | M.குத்தூஸ் ராஜா
மாநில முதன்மைச் செயலாளர் | மாநிலப் பொருளாளர்
இந்திய தேசிய லீக், சென்னை